# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்.155 தேதி:09.07.2014

# போராட்டத்திற்குக் கிடைத்திட்ட வெற்றி...

அருமைத் தோழர்களே,

நமது தமிழ் மாநில செயற்குழுவில் எடுத்த முடிவின்படி மாநில அளவில் கோரிக்கைகளை வென்றெடுக்க 04.07.2014 அன்று ஆர்ப்பாட்டமும், 11.07.2014 அன்று தர்ணா போராட்டமும் நடத்த அறைகூவல் விடப்பட்டது. 04.07.2014 அன்று மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கோபத்துடனும், ஆவேசத்துடனும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மாநில நிர்வாகத்திலிருந்து இரண்டு முறை பொது மேலாளர் (HR) மாநிலச்சங்கத்தை அழைத்து கோரிக்கைகளை விவாதித்தார். நமது கோரிக்கைகளைத் தீர்த்துவைக்கும் வகையில் சில உத்தரவுகளையும் பொது மேலாளர் வெளியிட்டார். தர்ணா போராட்டத்தை விலக்கிக் கொள்ள எழுத்துப்பூர்வமான வேண்டுகோள் கடிதத்தை மாநில நிர்வாகம் கொடுத்தது. சில பிரச்சனைகளில் முன்னேற்றம் இல்லாததால் வேண்டுகோளை ஏற்று போராட்டத்தை விலக்கமுடியாது என நிர்வாகத்திடம் 08.07.2014 அன்று தெரிவித்துவிட்டோம்.

இன்று (09.07.2014) தலைமைப் பொது மேலாளர் அவர்கள் மாநிலச்சங்கத்தை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். மாநிலச் சங்கத்தின் சார்பாக மாநிலச்செயலர் தோழர் S.செல்லப்பா, துணைச் செயலர் தோழர் M.முருகையா, மாநில பொருளர் தோழர் K.சீனிவாசன் மற்றும் மாநில துணைப் பொருளர் தோழர் R.மகேந்திரன் ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

தலைமைப் பொதுமேலாளர் அவர்கள் நமது கோரிக்கைகளை ஒன்றன் பின் ஒன்றாக விவாதித்து அதில் தீர்வு காண உறுதியளித்தார். பேச்சு வார்த்தை சுமூகமாக நடைபெற்றது. நமது கோரிக்கைகளின் நியாயத்தை தலைமைப் பொது மேலாளர் உணர்ந்துகொண்டது நல்ல அம்சமாகும். தமிழகத்தில் தனியாரோடு போட்டி போடும் நேரத்தில் தொழில் அமைதி கெடக்கூடாது என்று நம்மிடம் வேண்டுகோள் விடுத்தார். நிர்வாகம் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நியாயமாக புரிந்துகொண்டு தீர்ப்பதன் மூலம் தொழில் அமைதி பாதுகாக்கப்படும் என்று உத்தரவாதம் அளித்தோம்.

பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட உடன்பாடு.

1. ஊழியர்களின் பிரச்சனைகளை விவாதித்து தீர்த்து வைக்க நமது மாவட்ட சங்கங்களை மாவட்ட நிர்வாகம் சந்திக்கவேண்டும் என்று மாநில நிர்வாகம் உத்தரவு வெளியிட்டுள்ளது. (உத்தரவு எண். SR/50-1/2010 dated 08.07.2014 நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

2. BSNL நிறுவன வளர்ச்சிக்கு தேவையான உபகரணங்கள் கிடைப்பதற்கும், சேவையை மாவட்ட அளவில் உயர்த்துவதற்கும் “Works Committee” கூட்டங்களைக் கூட்ட வேண்டும் என்ற நமது கோரிக்கை ஏற்கப்பட்டு மாதம் ஒரு முறை கூட்ட வேண்டும் என்று மாநில நிர்வாகம் உத்தரவு வெளியிட்டுள்ளது. (உத்தரவு எண்: SR/1-15/W.C/2009 dated 02.07.2014 நகல் இணைக்கப்பட்டுள்ளது)

3. மருத்துவ பில்கள் பிரச்சனை தீர 20வது மாநில கவுன்சில் முடிவின்படி பரிசீலனைக் குழு கூட்டம் நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கை ஏற்கப்பட்டு 17.07.2014 அன்று கமிட்டி கூட்டம் நடைபெறும் என்று உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. (உத்தரவு எண். BSNL-MRS/M2/Genl/2011-15/51 dated 03.07.2014 நகல் இணைக்கப்பட்டுள்ளது)

4. ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கக்கோரி தருமபுரி மாவட்டத்தில் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட 32 தோழர்களுக்கு வழங்கப்பட்ட **Dies-non** ஐ ரத்து செய்யவேண்டும் என்று கோரினோம். தலைமைப் பொதுமேலாளர் நமது கோரிக்கையின் நியாயத்தினை புரிந்து கொண்டு, பழிவாங்குதலை விரைவாக தீர்த்து வைக்க உத்தரவாதம் அளித்துள்ளார்.

5. ஒப்பந்த ஊழியர்களுக்கு மாதந்தோறும் கார்ப்பரேட் அலுவலகம் நிர்ணயித்த ஊதியத்தை முறையாக வழங்குவது, EPF/ESI ஆகியவற்றை முறைப்படுத்துவது என்ற நமது கோரிக்கையை மாநில நிர்வாகம் ஏற்றுக்கொண்டு உத்தரவு வெளியிட்டுள்ளது. மாநில நிர்வாகம் வெளியிட்டுள்ள உத்தரவில் கார்ப்பரேட் அலுவலகம் ஒப்பந்த ஊழியர்களின் ஊதியம், EPF/ESI ஆகியவை சம்பந்தமாக இது வரை வெளியிட்டுள்ள உத்தரவுகளைக் கறாராக அமலாக்க வேண்டும் என்ற வழிகாட்டுதலோடு உத்தரவுகள் இணைக்கப்பட்டு அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும் அனுப்பியுள்ளது. (உத்தரவு எண். CVL/Contract Labours/2013 dated 02.07.2014 நகல் இணைக்கப்பட்டுள்ளது)

6. ஊழியர்கள் நிர்வாகத்தை ஒவ்வொரு புதன் கிழமையும் மதியம் 2.30 மணி முதல் 4.30 மணி வரை சந்திக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மாநில நிர்வாகம் வெளியிட்டுள்ளது. (உத்தரவு எண். AGM/Genl/2013-14 dated 03.07.2014 நகல் இணைக்கப்பட்டுள்ளது)

தோழர்களே,

மாநிலச் சங்கம் கொடுத்த அறைகூவலை ஏற்று அனைத்து மாவட்டங்களிலும் உறுதியுடன் ஊழியர்களைத் திரட்டி ஆர்ப்பாட்ட போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய அனைத்து தோழர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

நமது கோபத்தையும், நியாயத்தையும் புரிந்துகொண்டது மாநில நிர்வாகம். 11.07.2014 அன்று நடைபெற இருந்த தர்ணாவிற்கான தயாரிப்பு ஏற்பாடுகள் வெகு எழுச்சியாக நடைபெறும் என்பதையும் மாநில நிர்வாகம் புரிந்துகொண்டது. அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி ஊழியர் பிரச்சனைகளின் தீர்விற்கு ஒத்துழைத்த மாநில நிர்வாகத்திற்கு நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

இதன் அடிப்படையில் 11.07.2014 அன்று நடைபெற இருந்த தர்ணா போராட்டத்தை நாம் ஒத்திவைக்கிறோம். இந்த வெற்றி நமது பேரியக்கத்திற்கு கிடைத்த வெற்றி.

வெற்றிக்கு உழைத்திட்ட அனைவருக்கும் மாநிலச் சங்கத்தின் புரட்சிகர வாழ்த்துக்கள்.

தோழமையுடன்,

**C.வினோத்குமார்**
மாநிலச்செயலர்
TNTCWU

**S.செல்லப்பா**
மாநிலச்செயலர்
BSNLEU